பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**19 02 2026** **THURSDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

**1)** செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை நல்ல நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

**2)** தமிழகத்திலிருந்து புவிசார் குறியீடு பெற்ற ஜவ்வரிசி கனடாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதற்கு மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**3)** சத்ரபதி சிவாஜி, நீதி, தைரியம் உள்ளிட்டவைகளின் அடிப்படையில் நல்லாட்சி புரிந்ததாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் புகழாரம் சூட்டியுள்ளார்.

**4)** தமிழகத்தின் கடன் சுமை ஐந்து லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குறை கூறியுள்ளார்.

**5)** பெங்களூரு சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை நல்ல நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டியது அவசியம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப தாக்கத்தின் உச்சிமாநாட்டை இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்து பேசிய அவர், செயற்கை நுண்ணறிவு புள்ளி விவரங்களுக்கான கட்டமைப்பை உருவாக்கி, அதன் அடிப்படையில் முறையான பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

செயற்கை நுண்ணறிவு புள்ளிவிவரங்கள் துல்லியமானதாகவும், நம்பத்தகுந்ததாகவும், சமநிலையிலும் இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பயன்கள் நம்பிக்கை மிகுந்ததாக அமைய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

உலகளாவிய நம்பத் தகுந்த தகவல் கட்டமைப்பை வெளிப்படைத் தன்மையுடன் உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் பிரதமர் வலியுறுத்தினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பாதுகாப்பான முறையில் பயன்படுத்துவதற்கு வெளிப்படையான விதிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனால், இத்தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் இணையதளங்களை நெறிப்படுத்த முடியும் என்றும் அவர் ஆலோசனை தெரிவித்தார்.

பாதுகாப்புக்கான விதிமுறைகள் தெளிவாகவும், உடனுக்குடன் சரிபார்க்கும் வகையிலும் அமைதல் வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அன்றாட நடைமுறைகளில் வெளிப்படைத் தன்மையை கொண்டுவருவதற்கு இவை உதவும் என்றும் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்திலிருந்து கனடாவுக்கு வேளாண் மற்றும் உணவுப்பதப்படுத்துதல், ஏற்றுமதி மேம்பாட்டு கழகம் சார்பில், ஜவ்வரிசி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதற்கு மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சேலத்தைச் சேர்ந்த புவிசார் குறியீடு பெற்ற இந்த ஜவ்வரிசி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதன் மூலம், விவசாயிகளும், மலைவாழ் மக்களும் பயன்பெறுவார்கள் என்று கூறியுள்ளார்.

உலகளாவிய வேளாண் சந்தையில் ஜவ்வரிசி விற்பனை செய்யப்படுவதன் மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புவிசார் குறியீடு பெற்ற உணவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுவதன்மூலம், உலக சந்தையில் நமது உணவுப் பொருட்கள் பிரபலமடையும் என்று திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

சத்ரபதி சிவாஜியின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, மரியாதை செலுத்துவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நீதி, தைரியம் உள்ளிட்டவைகளின் அடிப்படையில் சத்ரபதி சிவாஜி நல்லாட்சி புரிந்ததாக புகழாரம் சூட்டியுள்ளார்.

சத்ரபதி சிவாஜியின் கொள்கைகள் நாட்டின் வளர்ச்சிக்காக சேவை செய்ய ஊக்கம் அளிப்பதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் ஜல் ஜீவன் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்விநேரத்தின்போது இதை தெரிவித்த அமைச்சர், நகராட்சி நிர்வாகத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல திட்டங்களையும் குறிப்பிட்டார்.

தஞ்சை மாவட்டம் ஐயம்பேட்டை மற்றும் திருவையாறில் புறவழிச்சாலை அமைக்கும் பணி முடிவடைந்தவுடன் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வாணியம்பாடி — ஆலங்காயம் ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக மாற்றியமைக்கும் பணி வனத்துறை அனுமதி பெற்றபின் நிறைவேற்றப்படும் என்றும் திரு கே என் நேரு தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

சென்னையை அடுத்த பல்லாவரத்தில் மறைமலை அடிகள் வாழ்ந்த இல்லத்தை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில செய்தித்துறை அமைச்சர் திரு சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இதை தெரிவித்த அமைச்சர், தமிழகத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் **124** நினைவுச்சின்னங்கள் மற்றும் மணி மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

<<<<<<<>>>>>>

தமிழக அரசு நிதி மேலாண்மையை சிறப்பாக கையாண்டு வருவதாக நிதியமைச்சர் திரு தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் இதை தெரிவித்த அமைச்சர், கடந்த அஇஅதிமுக ஆட்சியில் வாங்கிய கடனுக்கு வட்டி கட்டியதால்தான் கடன் சுமை அதிகரித்ததாக கூறினார்.

<<<<<<<>>>>>>

தமிழக அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தை கொண்டுவருவோம் என்று திமுக அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

பேரவையில் இதற்கு பதிலளித்த அமைச்சர் திரு எ வ வேலு, மாநில அரசு கொண்டுவந்த உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை அரசு ஊழியர் சங்கங்கள் வரவேற்றுள்ளதாக கூறினார்.

அரசு ஊழியர்கள் ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு இந்த திட்டத்தை மாநில அரசு கொண்டுவந்திருப்பதாகவும் திரு எ வ வேலு தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தாம்பரம் வட்டார மருத்துவமனை, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டதால், தினந்தோறும் 2 ஆயிரத்து 500 புறநோயாளிகள் சிகிச்சை பெற்று வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இதை தெரிவித்த அமைச்சர், இந்த மருத்துவமனையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆதரவு சிகிச்சை மையம் நேற்று தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

குறுகிய காலத்தில் இந்த மருத்துவமனையில் 145 கோடி ரூபாய் செலவில் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த மருத்துவமனையில் எம் ஆர் ஐ ஸ்கேன் அமைத்துத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தாம்பரம் அரசு மருத்துவமனையில் அனைத்து பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளதாகவும், மருத்துவர்கள் மற்றும் செவிலியர் காலி

பணியிடங்கள் எதுவும் இல்லை என்றும் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் கடன் சுமை ஐந்து லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குறை கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இதனை தெரிவித்த அவர், மாநிலத்தின் நிதிநிலைமையை சரிசெய்ய அமைக்கப்பட்ட திரு ரகுராம் ராஜன் குழுவின் யோசனைகளின் நிலை என்ன என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்று கூறினார்.

நிதி பற்றாக்குறை மட்டுமின்றி, வருவாய் பற்றாக்குறையும் இருப்பதாக அரசு கூறுவதாகவும், இது மாநிலத்தின் வளர்ச்சியை பாதிக்கும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

<<<<<<<>>>>>>

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்க அடுத்த மாதம் தமிழகம் வர உள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி மாநில பொதுச்செயலாளர் திரு கருப்பு முருகானந்தம், தமிழகத்தில் மூன்று இடங்களில் பிரதமர் பொதுக்கூட்டத்தில் பிரதமர் உரையாற்ற உள்ளதாக தெரிவித்தார்.

மார்ச் ஒன்றாம் தேதி மதுரையிலும், 7-ஆம் தேதி வேலூரிலும், 11-ஆம் தேதி திருச்சியிலும் பொதுக்கூட்டத்தில் பிரதமர் உரையாற்ற உள்ளதாக கூறினார்.

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதி மாணவர்களுக்கான வழிகாட்டி பயிற்சியினை மாவட்ட ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கி வைத்தார்.

-----------------

திருவாரூர் மாவட்டத்தில் வாக்குச்சாவடி மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி முகாம் ஆட்சியர் திரு மோகன சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

--------------

திருச்சி மாவட்டம் லால்குடி அருகே தடை செய்யப்பட்ட ஆயிரத்து தொள்ளாயிரத்து **81** கிலோ புகையிலைப் பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

--------------

ராணிப்பேட்டை மாவட்டம் லாலப்பேட்டை பகுதியில் ஆந்திராவுக்கு கடத்தப்படவிருந்த **12** டன் ரேஷன் அரிசியை பறிமுதல் செய்த காவல்துறையினர் மூன்று பேரை கைது செய்தனர்.

---------------

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சார்பில் சென்னையில் தொழில் முனைவோருக்கான பயிற்சி வரும் **25-**ஆம் தேதி முதல் **27-**ஆம் வரை நடைபெற உள்ளது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பெங்களூருவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 2-6, 6-4, 7-6 என்ற செட் கணக்கில், ஜப்பானின் Mai Hontama-வை வென்றார்.

---------------

சிங்கப்பூர் ஸ்மாஷ் டேபிள் டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் மனுஷா, சத்யன் ஞானசேகரன், ஆகாஷ்பால், Yashaswini Ghorpade ஆகியோர் வெற்றிபெற்றனர்.

---------------

Canberra-வில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா 19 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

-------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில், இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்னை — மும்பை அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<<<END>>>>>>>